# ஜனவரி – 19 – வெள்ளி

தூய கனியுட்

“தம்மோடு இருக்கவும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும் அவர் பன்னிருவரைத் தெரிந்தெடுத்தார்.’’ (மாற்கு 3: 14,15)

-----------------------------------------------------------------

## முதல் வாசகம் : 1 சாமுவேல் 24 : 2 – 21

சவுல் இஸ்ரயேல் முழுவதிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூவாயிரம் பேருடன் தாவீதையும் அவர்தம் ஆள்களையும் தேடி வரையாடுகளின் பாறைகளுக்கு எதிர்புறம் சென்றார். அவர் சென்ற போது வழியோரத்தில் ஆட்டுப் பட்டிகளைக் கண்டார் அதனருகில் ஒரு குகை இருந்தது. இயற்கைகடன் கழிப்பதற்கு சவுல் அதனுள் சென்றார். அப்பொழுது தாவீதும் அவர்தம் ஆள்களும் அக்குகையின் உட்பகுதியில் இருந்தனர். தாவீதின் ஆள்கள் அவரிடம், இதோ! உன் எதிரியை உன்னிடம் ஒப்புவிப்பேன். உன் விருப்பத்திற்கு ஏற்ப அவனுக்குச் செய், என்று ஆண்டவர் சொன்ன நாள் இதுவே! என்றனர். உடனே தாவீது தவழ்ந்து சென்று சவுலின் மேலங்கியின் தொங்கலை அவருக்குத் தெரியாமல் அறுத்தார். தாவீது சவுலின் தொங்கலை அறுத்தப்பின் அதற்காக மனம் வருந்தினார். அவர் தம் ஆள்களை பார்த்து, ”ஆண்டவர் திருப்பொழிவு செய்த என் தலைவருக்கு எத்தீங்கும் செய்யாதவாறு ஆண்டவர் என்னைக் காப்பாராக. ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவரானதால் நான் அவர் மேல் கைவைக்கக்கூடாது” என்றார். ஆதலின் தம் ஆள்கள் சவுலைத் தாக்காதவாறு தாவீது இவ்வார்த்தை களால் அவர்களைத் தடைசெய்தார். பின்பு சவுல் எழுந்து குகையை விட்டு தம் வழியே சென்றார். அதன்பின் தாவீதும் எழுந்து குகையிலிருந்து வெளியேறிச் சவுலைப் பின் தொடர்ந்து, ”அரசே, என் தலைவரே! என்று அழைத்தார். சவுல் பின்புறம் திரும்பிய போது தாவீது தரையில் முகம் குப்புற வீழ்ந்து வணங்கினார். பின்பு தாவீது சவுலை நோக்கி, ”தாவீது உமக்குத் தீங்கு செய்யத் தேடுகிறான்” என்று சொல்லும் மனிதனின் வார்த்தைகளை நீர் கேட்கலாமா? இதோ! குகையில் ஆண்டவர் உம்மை என்னிடம் ஒப்புவித்தார் என்பதை இன்று உம் கண்களே கண்டன் உம்மைக் கொல்ல வேண்டுமெனச் சிலர் என்னை வற்புறுத்தினார்கள் ஆனால் அவர் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பெற்றவர் என் தலைவருக்கு எதிராக நான் கை ஓங்கக் கூடாது என்று சொல்லி நான்தான் உம்மைக் காப்பாற்றினேன். என் தந்தையே பாரும்! என் கையிலிருக்கும் உம் மேலங்கியின் தொங்கலைப் பாரும். உம்மைக் கொல்லாமல் உம் மேலங்கியின் தொங்கலை மட்டும் அறுத்து எடுத்துள்ள என் செயலைப் பார்த்தாலே என்னிடம் யாதொரு குற்றமோ துரோகமோ இல்லையென்பதை நீர் அறிவீர்! நீர் என் உயிரைப் பறிக்கத் தேடினாலும், உமக்கெதிராக நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. உமக்கு எனக்கும் ஆண்டவர் நடுவராய் இருப்பாராக! என்பொருட்டு ஆண்டவரே உமக்கு நீதி வழங்கட்டும் ஆனால் உமக்கு எதிராக என் கை எழாது. முன்னோரின் வாய்மொழிக்கேற்ப, தீயோரிடமிருந்தே தீமை பிறக்கும்” ஆதலால் உம் மேல் நான் கைவைக்க மாட்டேன். இஸ்ரயேலின் அரசர் யாரைத் தேடிப் புறப்பட்டார்? யாரைப் பின்தொடர்கிறீர்? ஒரு செத்த நாயை அன்றோ? ஒரு தெள்ளுப் பூச்சியை அன்றோ? ஆண்டவர் நடுவராயிருந்து உமக்கும் எனக்கும் நீதி வழங்குவாராக! அவரே எனக்காக வழக்காடி உம் கையினின்று என்னை விடுவிப்பாராக! என்றார். தாவீது இவ்வாறு சவுலிடம் பேசி முடித்தப்பின் சவுல், ”என்மகன் தாவீதே! இது உன் குரல்தானா! என்று சொல்லி உரத்த குரலில் அழுதார். அவர் தாவீதிடம், ”நீ என்னிலும் நீதிமான். நீ எனக்கு நன்மை செய்தாய் ஆனால் நானோ உனக்கு தீங்கு செய்தேன். ஆண்டவர் என்னை உன்னிடம் ஒப்புவித்திருந்தும் நீ என்னைக் கொல்லவில்லை. இதனால் நீ எனக்கு நன்மையே செய்து வந்திருப்பதை இன்று நீ வெளிப்படுத்தியிருக்கிறாய். ஏனெனில் ஒருவன் தன் எதிரியைக் கண்ட பின் அவன் நலமுடன் செல்ல அனுமதிப்பானா? இன்று நீ எனக்கு செய்த நன்மைக்கு ஈடாக ஆண்டவரும் உனக்கு நன்மை செய்வாராக! இதோ, நீ திண்ணமாய் அரசனாவாய் என்றும் இஸ்ரயேலின் அரசை நீ உறுதிப்படுத்துவாய் என்றும் இப்போது நான் அறிகிறேன். ஆதலால் எனக்குப் பின்வரும் என் வழிமரபை நீ வேரறுப்பதில்லை என்றும் என் தந்தை வீட்டாரிலிருந்து என் பெயரை அழிக்கமாட்டாய் என்றும் ஆண்டவர் மேல் எனக்கு ஆணையிட்டுக் கூறு” என்றார்.

**பதில்பாடல் :** கடவுளே எனக்கு இரங்கும். எனக்கு இரங்கும்.

## நற்செய்தி : மாற்கு 3 : 13 - 19

இயேசு மலைமேல் ஏறித் தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர்களும் அவரிடம் வந்தார்கள்.. தம்மோடு இருக்கவும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும் பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் அவர் பன்னிருவரை நியமித்தார் அவர்களுக்குத் திருத்தூதர் என்றும் பெயரிட்டார். அவர் ஏற்படுத்திய பன்னிருவர் முறையே, பேதுரு என்று அவர் பெயரிட்ட சீமோன், செபதேயுவின் மகன் யாக்கோபு, யாக்கோபின் சகோதரரான யோவான் - இவ்விருவருக்கும் ”“இடியைப் போன்றோர்” எனப் பொருள்படும் பொவனேர்கேசு என்று அவர் பெயரிட்டார். அந்திரேயா, பிலிப்பு, பர்த்தலமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் யாக்கோபு, ததேயு, தீவிரவாதியாய் இருந்த சீமோன், இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து என்போர் ஆவர்.

**தியானம்:** முதல் வாசகம் தாவீதின் பொறுமையையும், தன்னடக்கத்தையும் எடுத்தியம்புகின்றது. கடவுளால் திருப்பொழிவு செய்யப்பட்டவருக்கு எதிராகத்தான் எதுவும் செய்யக்கடாது என்று தாவீது கடவுள்பால் தனக்கிருந்த பற்றுறுதியை வெளிப்படுத்துகிறார். இது அன்பின் வெளிப்பாடு. நற்செய்தியில் இயேசுவும் தமது அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு இறைவழியில் செல்ல வேண்டிய அவசியத்தை கட்டளையாகக் கொடுக்கின்றார். இது இயேசுவோடு கல்வாரி மலைவரை அவர்கள் இயேசுவோடு பயனிக்க வேண்டும் என்பதை மறைமுகமாக எடுத்துரைக்கின்றது. அவர்கள் எல்லோரையும் இயேசு விரும்பி அழைக்கின்றார். தாம் விரும்பி அழைத்தவர்கள் எப்போதம் தன்னோடு இருக்கவேண்டும் என்பதே இயேசுவின் ஆசை. தம்மோடு இருப்பது உடலளவில் எப்போது அவரோடு இருப்பதல்ல. மாறாக நற்செய்தியைப் பறைசாற்றி அவரின் விருப்பத்தின்படி வாழ்வதே. ஆகவேதான் சீடர்கள் இறையரசைக் கட்டியெழுப்பும் பணயில் ஈடுபட்டார்கள், துன்புறுத்தல்கள் மத்தியிலும் கிறிஸ்துவிற்கு சாட்சி பகிர்ந்தார்கள். இயேசுவின் சீடர்கள் விட்டுச்சென்ற அடிச்சுவடுகளை நாமும் பின்பற்றி இறையரசை முன்னெடுத்துச் செல்வதே எமது தலையாகிய கடமை எனபதைப் புரிந்து வாழ்வோம்.